விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 056 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 01 செவ்வாய்க்கிழமை (13.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுமக்களே! நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தொடர்பாடல் சட்டதிட்டங்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

தொடர்பாடல் சட்ட திட்டங்கள் மூலம் சகல தொலைபேசி அழைப்புகளும் பதிவு செய்யப்படும், சகல தொலைபேசி அழைப்புகளும் களஞ்சியப் படுத்தப்படும்,

வட்ஸ்அப், எக்ஸ் தளம் முகநூல் என்பன மேற்பார்வை செய்யப்படும்,

உங்களுடைய தொலைபேசி பாதுகாப்பு அமைச்சின் தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது, பொருத்தமில்லாத தகவல்

15

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்தக் குழுவுடனும் பேசத் தயார்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டத்தைத் தவிர்த்து வேறு மாற்றுவழிகள் இருப்பின் எந்தவொரு குழுவுடனும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச நிதி முகாமைத்துவம் தொடர்

15

# இந்தியாவுடனான உறவு மேலும் பலமடையும்




### மோடி பங்குபற்றிய காணொளி ஊடான மாநாட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை - இந்தியா இடையிலான உறவு மேலும் பலமடைந்து வலிமை பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விபரீத முடிவெடுத்த மாணவி மரணம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் விபரீத முடிவெடுத்த மாணவி ஒருவர் நேற்று உயிரி

15

## கொக்காவிலில் வீதி விபத்து
### 6 பேர் படுகாயம்

(முறிகண்டி)

முல்லைத்தீவு கொக்காவிலில் இடம்பெற்ற வீதி விபத்தில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் ஏ9 வீதி கொக்கா

15

## வலிகாமம் வடக்கில் 500 ஏக்கர் பொதுமக்களின் காணி சுவீகரிக்க முயற்சி

### மக்கள் போராட்டத்தையடுத்து நில அளவீடு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் மக்களின் வாழ்விடங்களில் இருந்து 500 ஏக்கர் காணியை சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி நேற்று அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி எனும் பெயரில் மேலும் 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்துத் தருமாறு விமானப் போக்குவரத்து அதிகார சபை கோரிக்கை விடுத்தது எனக் கூறியே இந்த முயற்சி இடம்பெற்றது.

இதற்குத் தாம்

15

## 13 வயது சிறுமி மன்னாரில் சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, எருக்கலம்பிட்டி 1ஆம் வட்டார பகுதியில் 13 வயதுடைய சிறுமி ஒருவர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தனது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி காணாமல் போன நிலையில், வவுனியாவில் இருந்து மீட்கப்பட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அழைத்து வரப்பட்ட நிலையில் குறித்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

15

## மின் கட்டணத் திருத்தம் 20ஆம் திகதி அறிவிப்பு

### அமைச்சர் கஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

மின்சாரக் கட்டணச் சலுகை எதிர்வரும் 20ஆம் திகதி அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

இந்த மின்சார கட்டணச்

15

## நிஷாந்த மரணம் சிஐடி விசாரணை ஆரம்பமானது

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரின் மரணம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மனித கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்

15

## கைபேசி பாவனையாளர்கள் சிம்மை பதிவு செய்ய வேண்டும்

### தொலைத்தொடர்பு ஆணைக்குழு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் தமது சிம் அட்டையை முறையாகப் பதிவு செய்யவேண்டும் என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பதிரண இதனைத் தெரிவித்துள்ளார்.

நீங்கள் தற்போது பயன் படுத்தாத

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18955)

076 825 7716 (ஆகாஸ்)



**Raveens EMC**
Karaveddy

**English Medium ( Grade - 06 )**

- Scholors Only ( Grade - 05 )
- Admission forms are Available in the Office
- Closing Date 20.02.2024 (Tuesday)

Director -
P. Easwaranathan

(C-8339)


# கிளிநொச்சி அரச அதிபர் இன்றுடன் ஓய்வு

## மாவட்ட செயலகத்தில் பிரியாவிடை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் அரச சேவையிலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை ஓய்வு பெறுகின்றார்.

இந்நிலையில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது. (ம-7,100)

## இந்தியா...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோர் கலந்து கொண்ட இலங்கை மற்றும் மொரீஷியஸில் ஒருங்கிணைந்த கட்டண (UPI) சேவைகள் மற்றும் மொரீஷியஸில் ரூபே கார்ட் (RuPay card) சேவைகளை ஆரம்பிக்கும் மாநாடு காணொளி மூலம் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த மாநாட்டில் உரையாற்றுகையில்,

"எனது இந்திய விஜயத்தின் தொலைநோக்கு பார்வையை இலக்காக கொண்டு பல விடயங்கள் ஆராய்ந்திருந்தேன்.

அத்துடன் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய விடயமே இந்த பணப் பரிமாற்ற முறை ஆகும்.

இது எமக்கு மிகவும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இதன்மூலம் தமிழ்நாடு, மும்பை ஆகியவற்றுடன் இலங்கை தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

இதனால் 4 இலட்சம் வர்த்தகர்கள் பயனடைவார்கள்.

இந்திய வெளியுறவு அமைச்சருடனான பேச்சுவார்த்தை நம்பிக்கைக்குரிய முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றது.

குறிப்பாக மொரீஷியஸ் உடனான ஒத்துழைப்பின் ஊடாக புதிய தொடர்புகளை மேம்படுத்தும் முயற்சியை இந்த பணப்பரிமாற்ற முறை மேலும் உறுதிசெய்யும்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


## கேள்வி அறிவித்தல்

புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயம்
மீள்கட்டுமானம் செய்ய இருப்பதினால்
அதனை ஒப்பந்த அடிப்படையில்
கட்டித்தருவோர் தேவைப்படுகின்றார்கள்.

எனவே ஒப்பந்தகாரர்கள் 18.02.2024இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியுடனோ, தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

தலைவர் / செயலாளர்
புற்றளைச் சித்திவிநாயகர்,
ஆலய பரிபாலன சபை,
புற்றளை, புலோலி.

(18983)

தலைவர் தொலைபேசி இல : 077 809 7352
செயலாளர் தொலைபேசி இல : 077 188 6306


## தேவை

சட்டறிங் வேலைக்குரிய
Shutter board
பலகைகள் தீராந்திகள்,
தடிகள் உடன் தேவை.

075 164 0104
076 288 4366

(C-8341)


யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
தேசிய பாடசாலை பருத்தித்துறை

**பாடசாலை சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடுதல்**

மேற்படி பாடசாலையின் சிற்றுண்டிச் சாலையினை 2024.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான விலைமனுப் படிவம் மற்றும் மேலதிக தகவல்களை பாடசாலை அலுவலகத்தில் ( அலுவலக நேரத்தில் ) பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2024.02.26
விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் 2024.02.27 பி.ப 2.00 மணி

(C-8336) - அதிபர் -

## மரண அறிவித்தல்



### திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரம் மண்டைதீவை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்புத்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை பரமேஸ்வரி அவர்கள் கடந்த 10.02.2024 (சனிக்கிழமை) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னக்குட்டி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை அவர்களின் பாசமிகு துணைவியாரும் சந்திரகலா, சந்திரகாந்தன் (சுவிஸ்), சந்திரலதா (பிரான்ஸ்), சந்திரமோகன் (லண்டன்), சந்திரவதனா, சந்திரபாலன், சந்திரபாமா (ICT Officer, கச்சேரி), சந்திரபிரியா (பல் வைத்தியர், கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரன், கல்யாணி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்), கோணேஸ்வரி (லண்டன்), றமேசன், கவிச்சந்திரன், புருஷோத்தமன் (பல் வைத்தியர் - Jaffna Dental Clinic) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவ், தனுஜன், விக்கினேஸ்வரன், கிஷான், அக்ஷயன், அனீஷ், ஹரீஷ், ஜதீஷ், லசிஹா, ஜெசியா, சஜிந், சஜிகாந், ரக்ஷின், விதுஷனா, அனன்யா, அஷ்வின், ஆரோன் சேயோன், அத்விகா சோழன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.02.2024) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல. 44, இலந்தைக்குழம் வீதி (மாம்பழம் சந்தி) கொழும்புத்துறையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

இல.44, இலந்தைக்குழம் வீதி,
(மாம்பழம் சந்தி),
கொழும்புத்துறை.

சந்திரகாந்தன் (மகன்) : + 41 77 904 8668,
சந்திரலதா (மகள்) : [illegible]
சந்திரமோகன் (மகன்) : + 44 74 260 79440
சந்திரவதனா (மகள்) : 077 324 6857

(18991)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக திட்டமிடல் கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**பா.ஞானச்செல்வம்** அவர்களின் அன்புத் தாயார்



### திருமதி பாலசுந்தரம் மரியநாயகி

அவர்கள் 09.02.2024 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-8340)

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

உ
சிவமயம்
ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நம:

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

### கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**சோபகிருது வருட ( 2024 ) மஹோற்சவம்**

நிகழும் சோபகிருது வருஷம் மாசித்திங்கள் 03ம் நாள் (15.02.2024) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

| | |
|---|---|
| கொடியேற்றம் | - 15.02.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி |
| தேர்த்திருவிழா | - 23.02.2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி |
| தீர்த்தத்திருவிழா | - 24.02.2024 சனிக்கிழமை காலை 8.00 மணி |

021 222 5770
077 669 1309

தேவஸ்தான
ஆதீன கர்த்தாக்கள்.

(18981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Junior

## Spoken & Written Elocution

**பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்ற 84 மாணவர்களை பாராட்டுகின்றோம்.**



P.அஸ்வின் | S.அபிராம் | A.சகானா | J.அக்ஷயன் | K.யதுஷ்னா | G.சஸ்மிதா | S.ஹர்ஷா | T.ஆகித்யா | U.அகிஸ் | K.மயூரேசன்



P.வருணிகா | P.பிரக்கியா | T.கிருஷ்வினா | U.லிசாதனா | J.ஆதித்தன் | K.அனாமிகா | T.ஜருஷன் | T.ஜதுஜன் | G.மிதுகர்சன் | G.சந்தோஷி



P.அபிஷோக் | S.லோயிகன் | P.அபிவர்ஷி | N.கிசாலினி | N.இலக்கணா | N.இலக்கியா | K.நதீஷா | S.யிவானு | P.ஆருசன் | K.ஷரத்



R.ஆத்விக் | E.S.அலன் அஸ்வின் | J.சுவர்னிகா | K.கிருத்திக் | A.அக்ஷரன் | S.நவீனன் | K.திவிகா | K.ஜானுகா | K.மித்ரா | K.ஜினேஸ்விகா



T.மோகலயா | K.வர்ஷா | S.சாதுரியா | J.கௌதம் | T.நிதிக்சன் | M.ஹரினேஸ் | M.நிக்சிகா | S.கனிஷ்யா | J.சஷ்விகா | V.சர்வின்



U.மாதுளன் | T.அக்ஷயா | G.ஹர்ணிகா | P.அக்ஷயா | J.அஸ்மிகா | M.பியோனிகா | M.சாகித் | K. சன்சயா | P.ஜஸ்வினி | T.கிதுசிகன்



M.பவிஷனா | T.யாழோவியன் | S.டயனிகா | T.ஸ்ரீகிருஷ்ணிகா | A.ஆதனா | P.திபிஸ் | V.லஜினன் | R.கேஷிகன் | K.அட்ஷயன் | J.அபிஷ்னா



P.பிரவின் | G.றேமிகா | S.ஷஞ்சனா | T.எப்சிபா | K.மிஸ்ரியா | U.தருகேஷன் | Y.ஆருத் | S.கனிஸ்ரிகா | S.ஹர்ஷிகா | R.யனுஷாதனா



K.ஹிருஸ்றிஹறன் | T.ஹர்ஷிஜன்

- T.மதுவர்ஷா
- D.ரேனுசா

**வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்:**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி

**ஆசிரியர் – திருமதி. பிரகாஷ் சுமிதா**
**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

- Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written) 4 வயதிலிருந்து 14 வயதுவரை
- English Classes (ஆங்கில வகுப்புக்கள்)

(18979)

**இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சட்டநாதர் கோயில் முன்) 077 199 9630**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர்

# சூப்பர் லீக் சுற்றுக்கு தகுதி பெற்ற நாவாந்துறை, நவிண்டில், ஆனைக்கோட்டை அணிகள்







யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் சூப்பர் லீக்கிற்குள் நாவாந்துறை சென்மேரிஸ், நவிண்டில் கலைமதி, ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் தகுதி பெற்றுள்ளனர்.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதி யுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதான த்தில் நடை பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து வதிரி பொம் மேஸ் அணி மோதி யது.

இதில் நாவாந்துறை சென்மேரிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் நவி ண்டில் கலைமதி அணியை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை அணி மோதியது.

இதில் நவிண்டில் கலைமதி அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. அதேவேளை அடுத்து நடைபெற்ற பிறிதொரு ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனி யன் அணியை எதிர்த்து சுமரபாகு நியூட்டன் அணி மோதியது.

இதில் ஆனைக் கோட்டை யூனியன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிட த்தக்கது. (5-6-90)

# ஆடவருக்கான உலகக்கோப்பை சம்பியனான அவுஸ்திரேலியா




ஆடவருக்கான உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி சம்பியனானது அவுஸ்திரேலியா.15 ஆவது ஜூனியர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டியில் இந்தியா- அவுஸ்தி ரேலியா அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பட்டிங்கை தேர்வு செய்தது. அதன் படி முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 253 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ஹர்ஜாஸ் சிங் 55 ரன்கள் விளாசினார்.இதனையடுத்து 254 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி விளையாடியது.இறுதியில் இந்திய அணி 174 ரன்களுக்கு ஒல் அவுட் ஆனது. இதனால் அவுஸ்திரேலியா 79 ரன்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்த போட்டியிலும் இந்திய அணி தோல் வியை தழுவியதன் மூலம் அவுஸ்திரேலியாவிடம் தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக ஐசிசி கோப் பையை தவறவிட்டுள்ளது. டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் ரோகித் தலைமையிலான இந்திய அணி தோல்வியை தழுவியது. அதனையடுத்து நடந்த ஒருநாள் உலகக் கோப்பை தொடரிலும் இந்திய அணி தோல்வியை தழுவியது. அந்த நிலையை ஜூனியர் இந்திய அணி மாற்றும் என்ற நம்பிக் கையும் பொய்யானது. ரசிகர்கள் மத்தியில் பெரும் வரு த்தத்தை ஏற்படுத்தி உள்ளது. ஐசிசி கோப்பை கனவு எட்டா கனியாகவே இந்திய அணிக்கு உள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அதிக வெப்பத்தால் சிறுவர்களிடையே பரவும் தோல் நோய்!

(கொழும்பு)

**நாட்டில் தற்போது நிலவும் மிகவும் வறண்ட காலநிலை காரணமாக தோல் நோய்கள் அதிகரித்து வருவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

இந்நிலைமையானது சிறுவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ள சிறுவர்களுக்கு கூட இந்நாட்களில் குளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவைகளாவது குளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் ஒருவருக்கு தோல் நோய்கள் இருப்பின் காலையிலும் இரவிலும் சுமார் 20 நிமிடங்களேனும் நீரில் இருப்பதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (5-6)

# ஐ.ம.ச தேர்தல் கூட்டங்களை புறக்கணிக்கும் பொன்சேகா

(கொழும்பு)

கட்சித் தலைமையுடன் கருத்து முரண்பட்டு வரும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டங்களில் பங்கேற்பதை தவிர்த்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கல்கமுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய விவசாயிகள் மாநாட்டிற்கு சரத் பொன்சேகாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை, கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மனக்கசப்புடன் செயற்படும் சரத்பொன்சேகாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தெரிவித்துள்ளனர்.

கட்சியின் தலைவர் என்ற ரீதியில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் அவருக்கு கீழே உள்ள ஏனைய உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் பாரிய சிக்கலை எதிர்நோக்க நேரிடும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு மேலும் வலியுறுத்தியுள்ளது. (5-6)

# சுற்றுலாவிகளின் வருகை தொடர்ந்து அதிகரிப்பு

(கொழும்பு)


நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இதன்படி, இந்த மாதத்தின் கடந்த 8 நாட்களில் மாத்திரம் 60,122 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துடன், கடந்த மாதத்தில் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ரஷ்யாவில் இருந்து 8,755 சுற்றுலாப்பயணிகளும் இந்தியாவில் இருந்து 8,369 சுற்றுலாப்பயணிகளும் ஜேர்மனியில் இருந்து 4,423 சுற்றுலாப்பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். (5-6)


CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்

CARNIVAL



(18953)

இடம்: யாழ்.முற்றவெளி மைதானம்.

காலம்: February 13 தொடக்கம் 18 வரை

கடைத்தொகுதிகளுக்கு, விளம்பரப்படுத்தல்களுக்கு, அனுசரணையாளர்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

(கடைகளுக்கான ஏலத் திகதி 12.02.2024 மாலை 6 மணிக்கு)

தொடர்புகளுக்கு:

0772546511, 0775002840


# இராசிபலன்

13.02.2024
மாசி 01, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.40 மணிவரை
உத்திரட்டாதி மாலை 6.09 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
சதுர்த்திவிரம், அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
ஆயிலியம், மகம்

வள்ளவன்



மேஷம்

எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



கடகம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.



துலாம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



மகரம்

ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு செயற்படும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள்.



ரிஷபம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.



சிம்மம்

தொழில் ரீதியான சில குழப்பங்கள் தோன்றி மறையலாம், திருடர் பயமுண்டு, எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பணப் பற்றாக்குறை ஏற்படலாம்.



விருச்சிகம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு.



மிதுனம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், மனநிறைவு கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.



கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வருமானம் திருப்தி தரும்.



தனுசு

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், சுப காரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், கற்பனை மிகுதியான நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

வேலை செய்யவில்லையானால் வாழ்வு புனிதமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலய காணிகளை விடுவிக்க நடவடிக்கை முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பலாலி கிழக்கு பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படும் காணிகளில் சில காணிகளை விடுவிக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

பலாலி கிழக்கில் ஒரு தொகுதி காணியை விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதன் அடிப்படையில் தற்போது சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கடித பரிமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் கொழும்பில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று யாழ் வருகை தந்து காணி விடுவிப்புக்கான அளவீட்டு பணிகள் உள்ளிட்ட இதர பணிகளை முன்னெடுக்கும். அதனை அடுத்து காணிகளை விடுத்து உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என தெரிவித்தார். (5-6-33)

# எழுதுமட்டுவாழ் பகுதியில் பேருந்து-உழவியந்திரம் விபத்து

## இருவர் காயம்



(சாவகச்சேரி)
கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை வேளையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் மேலும் ஒருவர் சிறு காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ் நோக்கி பயணிகளுடன் வந்த பேருந்து எழுதுமட்டுவாழ் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த உழவியந்திரத்துடன் மோதியதில் உழவியந்திர சாரதி படுகாயமடைந்ததுடன் பேருந்தில் பயணித்த பயணி ஒருவரும் சிறு காயங்களுக்கு இலக்காகி உள்ளார்.

படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-30-33)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள்.மரணம்.உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதிவழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு இல.17, மார்ட்டின் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் "கலைஞான சுரபி"தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட மூத்த அருட்தந்தையர்களில் ஒருவரான அருட்தந்தை ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார். பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் புதிதாக இணைந்து கொள்ள விரும்பு பவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (5-6)

# உதைபந்தாட்ட இறுதிஆட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையமும் சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாவட்ட ரீதியான சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியும் மோதவுள்ளது. (5-6-90)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண்.வடகிழக்கு கட்டடி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடை பெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வரும் காட்சி இடம்பெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# கச்சதீவு திருவிழா தொடர்பில் போக்குவரத்து நடைமுறை

(யாழ்ப்பாணம்)
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய யாழ். மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் யாழ். ஆயர் இல்லம் இலங்கை கடற்படை பிரதேச செயலகம் நெடுந்தீவு மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் எதிர்வரும் 23ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் திருவிழாவில் கலந்து கொள்ளவுள்ள மக்களுக்கான விசேட அறிவித்தலை யாழ்.மாவட்ட செயலகம் நேற்று வெளியிட்டுள்ளது அதில் தெரிவிக்கப்பட்டதாவது எதிர்வரும் 23 ஆந் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10) மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து குறிகட்டு வான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிகட்டுவான்,நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து 23 ஆம் திகதி காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய இறங்குதுறைகளில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1500 ஆகும்.

மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்பு கொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக் கொள்வதுடன் படகுகளில் பயணம் செய்பவர்கள் தனித் தனிப்படகாக பயணம் செய்யாது குழுவாக இணைந்து பாதுகாப்பான முறையில் பயணிப்பதுடன் 23ஆம் திகதி பி.ப 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு பி.ப 6 மணிக்கு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண்டும் என யாழ். மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார் (5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 250 | 350 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 1000 | 900 | 1000 | 1000 | 970 |
| தக்காளி | 800 | 700 | 800 | 900 | 650 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 160 | 130 |
| கோவா | 450 | 450 | 500 | 550 | 600 |
| கரட் | 800 | 900 | 800 | 900 | 900 |
| பூசணி | 280 | 280 | 250 | 320 | 230 |
| புடோல் | 200 | 200 | 200 | 300 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 220 | 250 | 210 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 300 | 350 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 320 | 350 | 350 | 400 | 350-500 |
| பாகற்காய் | 600 | 400 | 600 | 500 | 410 |
| வெண்டக்காய் | 500 | 500 | 240 | 500 | 405 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 500 | 570 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 500 | 550 |
| பீற்றூட் | 450 | 300 | 400 | 400 | 380 |
| கறிமிளகாய் | 800 | 900 | 600 | 1200 | 700 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 1600 | 1200 | 1500 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 600 | 550 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | 350 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 | 100 | 60-90 |
| தேசிக்காய் | 150 | 250 | 250 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 105 | 80 | 70-110 | 80-100 |
| இராசவள்ளி | 320 | 500 | 400 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 280 | 300 | 220 |
| முள்ளங்கி | 120 | 150 | 160 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 80 | 120 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 | 70 |
| [illegible] | 100 | 100 | 100 | 200 | 110 |

# திண்மக்கழிவு சேகரிப்பு மையம் வேலணையில் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)
வேலணை பிரதேச சபையினால் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து பெற்றுக் கொள்வதற்காக சேகரிப்பு மையமொன்றை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த கழிவு சேகரிப்பு மையத்தினூடாக வார நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை திண்மக் கழிவுகளினை கையளிக்க முடியுமென்பதுடன் தரம் பிரிக்கப்படாத கழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் வேலணை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார தொழிற் சங்கங்கள் பகிஸ்கரிப்பு

(கொழும்பு)

72 சுகாதார தொழிற்சங்கங்கள் இன்று காலை 6 மணி முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 35,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவு, தமக்கும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 72 சுகாதார தொழிற் சங்கங்கள் பல தடவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன.

இந்த விடயம் தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுக்கும், சுகாதார தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

குறித்த பேச்சு வார்த்தை தோல்வியடைந்த நிலையில் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற் சங்கங்களினது கூட்டமைப்பின் இணைப்பாளர் சானக்க தர்மவிக்ரம குறிப்பிட்டுள்ளார். (5-6)

# போதை மாத்திரை பாவிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)




போதைப் பொருட்களுக்கு நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய தட்டுப்பாடு காரணமாக போதை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இது தொடர்பான தகவல்கள் தெரிய வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த நாட்களில் 3,63,438 போதை மாத்திரைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

யுக்திய நடவடிக்கை காரணமாக பெருந்தொகையான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதுடன் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் அதிக எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-6)

# மக்கள் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும்- காரியவசம்

(கொழும்பு)

மக்கள் இந்த முறை சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளனம் நேற்று முன்தினம் யக்கல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

சர்வதேச நாடுகளின் உதவி இல்லாமல் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. அதனை விளங்கிக் கொண்டதாலே ஜனாதிபதி சர்வதேச நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு, அந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தற்போதும் ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்று, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார். அதனால் நாட்டை கட்டியெழுப்பி பொருளாதாரத்தை பலப்படுத்திக்கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பினால், நாடு பாதாளத்துக்கே சென்றுவிடும் என தெரிவித்தார்.(5-6)

# நிறைவேற்று அதிகாரமுறை நீக்கத்தில் ரணில் தீவிர கவனம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூர்ய தலைமையிலான குழுவொன்றை நிறைவேற்று அதிகாரமுறை நீக்கம் தொடர்பாக ஆராய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலா? அல்லது சர்வஜனவாக்கெடுப்பா? முதலில் எது இடம்பெறும் என சொல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவிடமும் இதற்கான விடையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5-6)

# சீன நிறுவனத்திடமிருந்து இலங்கைக்கு எரிபொருள்

(கொழும்பு)

சீன நிறுவனத்திற்கும், இலங்கையின் முதலீட்டுச் சபைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ள உத்தேச சீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இலங்கைக்கு எரிபொருளை கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் உற்பத்தியில் 20 சதவீதத்தை கொள்வனவு செய்ய இலங்கைக்கு உரிமை உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சீன பெற்றோலியம் மற்றும் கெமிக்கல் கோர்ப்பரேஷன் அல்லது சினோபெக் நிறுவனம் இலங்கையின் எரிபொருள் சந்தையில் பிரவேசித்தமையை அடுத்து, எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் திட்டத்தை அறிவித்தது.

சுத்திகரிப்பு நிலையத்தின் முதல் கட்டத்தின் போது சினோபெக் நிறுவனம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைக் கொண்டுவரவுள்ளது. (5-6)


## பெறுகை அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை
## சபை நிதி-2023

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற் கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற் றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் **13.02.2024** ஆம் திகதியிலிருந்து **26.02.2024** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் **13.02.2024** ஆம் திகதியிலிருந்து **26.02.2024** ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும்,மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற் றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு **27.02.2024** ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் . அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே **(27.02.2024 பி.ப 14.00)** வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | எண்ணிக்கை (No of Set ) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/CF/CCTV/26/2023 | Supplying & Installation of CCTV Camera System for Head Office of Pachchilaipalli Pradeshiya Sabha, Pallai | 01 | 10,000.00 | 14.05.2024 |
| | Supplying & Installation of CCTV Camera System for Mullipattu Sub Office at Iyakkachchi -Pallai | 01 | | |
| | Supplying & Installation of CCTV Camera System for Muhamalai Sub Office at Iththavil- Pallai | 01 | | |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,பளை.**


(சி-8338)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ஐக்கிய அமீரகத்தில் கட்டப்பட்ட முதல் இந்துக்கோவில்

## திறந்து வைக்கவுள்ளார் பிரதமர் மோடி



(அபுதாபி)

ஐக்கிய அமீரகத்தில் முதல் இந்துக்கோயில் நாளை இந்திய பிரதமத் நரேந்திர மோடியால் திற ந்து வைக்கப்படவுள்ளது.

மத்திய கிழக்குப் பகுதி யில் அமைந்துள்ள இஸ்லா மிய நாடான ஐக்கிய அமீ ரகத்தில் இந்தியா உள்ளி ட்ட பல நாடுகளைச் சேர்ந் தவர்கள் பணிபுரிந்து வரு கின்றனர்.

துபாய் - அபுதாபியை இணைக்கும் ஷேக் சயீத் நெடுஞ்சாலையில் 27 ஏக் கர் நிலப்பரப்பில் பளிங்குக் கற்களால் இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது.

இதில் ராமர் மற்றும் விநாயகர் உள்ளிட்ட இந் துத் தெய்வங்களின் சிற்பங் களும் உள்ளன.

மேலும் இதில் இரண்டு டோம்கள் ஏழு ஐக்கிய அமீரக மாகாணங்களைக் காட்டும் வகையில் ஏழு கோபுரங்கள், 12 குவி மாட ங்கள் மற்றும் 402 தூண் கள் உள்ளன.

ஒவ்வொரு தூணிலும் ராமாயணம், சிவபுராணம், பகவத்கீதை மற்றும் மகா பாரதத்தின் கதைகளின் காட்சிகள் அப்படியே தத்ரூ பமாகச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

மேலும் பூமி, நீர், நெரு ப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகியவற்றைக் காட்டும் ஒரு சிறப்பு குவி மாடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விடா முயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் சகிப் புத்தன்மையின் சின்ன மான ஒட்டகமும் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


கோயிலின் உட்புறம் கட்ட 40,000 கன அடி பளி ங்குக் கற்கள் பயன்படுத் தப்பட்டுள்ளதாகக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள் ளது.

இந்த கோயில் கட்டுமா னத்திற்காக 700 கண் டெய்னர்களில் கற்கள் இந்தியாவில் இருந்து ஐக்கிய அமீரகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள் ளன. (5-6)

# லெபனா...

# நெதன்ய...

## ஈரானிய...



காசாவில் நடைபெறும் போர் அதன் அண்டை நாடு களுக்கும் பரவலாம் என்ற பத ற்றமும் அச்சமும் காணப்படும் நிலையில், ஈரானிய வெளி விவகார அமைச்சர் இந்த

கருத்தை ...
லெபன...
ஹமாஸ் ...
கிழக்கில்...
ஆயுதக் ...
ரவு வழங்...

# டில்லியை முற்றுகையிடவுள்ள விவசாயிகள்


(டில்லி)

ராஜஸ்தான், உ.பி., பஞ் சாப், பீகார், கேரளா உள் ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டில் லியை இன்று முற்றுகை யிட்டு போராடத் தீர்மானித் துள்ளதாகத் தகவல் வெளி யாகியுள்ளது.

டில்லியில் கடந்த 2020 ஆம் ஆண்டு விவசாயிக ளால் முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டத்தைப் போன்று மீண்டுமொரு பாரிய போராட்டத்தை இன்று முதல் முன்னெடுக்க பஞ்சாப், ஹரியாணா உள் ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் தீர் மானித்துள்ளதாகவும் இத ற்கு சுமார் 200 விவசாய அமைப்புகள் ஆதரவு தெரி வித்துள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

விவசாய விளைபொருட் களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் வழங் குதல் உள்ளிட்டப் பல வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இப் போரா ட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் கோரிக் கைகள் நிறைவேறும் வரை இப்போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித் துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் டில்லி, பஞ்சாப் மற்றும் ஹரி யாணா மாநில எல்லை களில் கூட்டங்கள் கூடுவ தற்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு, அப்பகுதிகளில் பாதுகா ப்புப் பலப்படுத்தப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (5-6)



# இளைஞர், யுவதி... இராணுவத்தில் கட...

## மியன்மார் இராணு...

(நைப்பியிதோ)

இராணுவத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில் மியன்மார் இராணுவ அர சாங்கம் சகல இளைஞர், யுவதிகளுக்கும் இராணுவ சேவையை கட்டாயமாக் கியு ள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மியன்மாரில் நிலவும் பதற்றமான சூழ்நிலை கார ணமாக அனைத்து 18 முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண் கள் மற்றும் 18 முதல் 27 வயதுக்குட்பட்ட பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகள் இராணுவத்தில் கடமை யாற்ற வேண்டும் என இரா ணுவ அரசாங்கம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு சதிப் புரட்சி மூலம் மியன்மார் இராணுவம் அந்நாட்டின்



ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது டன் அந்நாட்டின் ஜனநாயக தலைவி உட்பட ஜனநாயகத் தலை வர்களை வீட்டுக் காவலிலும் சிறைகளிலும் அடைத்துள்ளது.

இந்நிலையில், போராளி அமைப் புக்கள் மற்றும் இராணுவ விரோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னான் மீது தாக்குதல் நடத்தினால்
# ன்யாகுவின் கதை முடிந்து விடும்
## னிய வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை



**(பெய்ரூட்)**

**லெபனான் மீது இஸ்ரேல் முழு வீச்சிலான பெரிய தாக்குதல்களை நடத்தினால், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கதை முடிந்து விடும் என ஈரானிய வெளி விவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் எச்சரித்துள்ளார்.**



கருத்தை வெளியிட்டுள்ளார். லெபனானின் ஹிஸ்புல்லா, ஹமாஸ் உட்பட மத்திய கிழக்கில் இயங்கும் பல ஆயுதக் குழுக்களுக்கு ஆத வு வழங்கி வரும் ஈரானின் வெளிவிவகார அமைச்சர், லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்கு மூன்றாவது முறையாக நேற்று முன் தினம் விஜயம் செய்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

லெபனானின் மீது பாரிய தாக்குதலை நடத்த இஸ்ரேல் எடுக்கும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அது நெதன்யாகுவின் இறுதி முடிவாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இஸ்ரேலின் சியோனிச ஆட்சி ஒருபோதும் இரு முனைகளில் போராட முடியாது. காஸா புதைகுழியில் இருந்து வெளியேற நெதன்யாகு போராடி வருகிறார்.

காசாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை ஒரு அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்து வருகிறது. எனினும் நெதன்யாகு தன்னை தற்காத்து கொள்ள போர் மூலம் தீர்வை தேடி வருகிறார் எனவும் அவர் தெரிவித்தார். (5-6)

# திகள் அனைவரும்
# டமையாற்ற வேண்டும்
## ணுவம் அறிவிப்பு



பது
வி
வும்
மைப்
தா

போராளிகளுடன் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மோதல்களில் மியன்மார் இராணுவம் மோசமான தோல்வியை எதிர் நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இராணுவத்தைப் பலப்படுத்தும் நோக்கில் மியன்மார் இராணுவ அரசாங்கம் சகல இளைஞர், யுவதிகளுக்கும் இராணுவ சேவையை கட்டாயமாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

# ஐ.நா தலைமையகத்திற்கு கீழே ஹமாஸின் சுரங்கப்பாதை
## இஸ்ரேல் இராணுவம் கண்டுபிடிப்பு

(காசா)

காசாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன அகதிகளுக்கான தலைமையக அலுவலகத்திற்கு கீழே ஹமாஸின் சுரங்கப்பாதைகள் இருப்பதை கண்டுபிடித்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பு ஹமாஸ் அமைப்பினருக்கு மறைமுகமாக உதவி வருவதாக முன்னரே இஸ்ரேல் கூறிவந்திருந்த நிலையில் இந்த சுரங்கப்பாதை கண்டுபிடிப்பு இஸ்ரேலின் குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்ப்பதாக அமைகின்றது.

இந்த சுரங்கப்பாதைகள் ஹமாஸ் போராளிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் இதற்கான மின்சார விநியோகம் ஐ.நா அமைப்பின் தலைமையகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது என இஸ்ரேல் இராணுவம்



மேலும் தெரிவித்துள்ளது.

இந்த சுரங்கபாதை அரை கிலோமீற்றர் தூர நீளத்துக்கு இருப்பதாகவும் இதில் ஆங்காங்கே 10 கதவுகள் காணப்பட்டதாகவும் இதனைப் பார்வையிட்ட இஸ்ரேல் இராணுவம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளது.

காசாவின் குறுக்கே பல கிலோமீற்றர்களிற்கு சுரங்கப் பாதைகளை அமைத்ததாக ஹமாஸ் அமைப்பு ஒப்புக் கொண்டிருந்த வேளையில் தற்போது இந்த சுரங்கப் பாதை இஸ்ரேல் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி ஆரம்பமாகிய இஸ்ரேல்-ஹமாஸ் போரின் முக்கிய நோக்கங்களில், காசாவில் ஹமாஸ் அமைத் திருக்கும் அனைத்து கட்டுமான வசதிகளை அழிப்பதும் ஒன்று என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200 அத்தியாவசியமான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு

**(கொழும்பு)**

**நாட்டில் சுமார் 200 வகையான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

மிகவும் அத்தியாவசியமான 40 வகையான மருந்துப் பொருட்களும் ஏனைய 160 வகையான மருந்து வகைகளுக்கும் இவ்வாறு தட்டுப்பாட்டு நிலை உருவாகியுள்ளது.

மருத்துவ விநியோகப் பிரிவில் இந்த வகை மருந்துகள் கிடையாது என தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது மருந்துப் பொருள் தட்டுப்பாடு தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுமார் 300 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்டதாகவும் தற்பொழுது அந்த எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது. (5-6)

## மோசடி செய்த 7 பேருக்கு வழக்கு

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த 5 அதிகாரிகள் உட்பட7 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக கையூட்டல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கையூட்டல் விசாரணை ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி வழங்கப்படாத சுமார் 400 பேர் மகிழுந்துகளை மோசடியான முறையில் அந்த திணைக்களத்தில் பதிவு செய்துள்ள அதே வேளை 156 வாகனங்கள் தொடர்பான தகவல்களை கையூட்டல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

## சிறுவர்களின் சிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியம் நிதியுதவி

(கொழும்பு)

சிறுவர்களுக்கான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புலன் மாற்று அறுவைசிகிச்சை உள்ளிட்டவற்றிற்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதியுதவி வழங்கப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், ராகம போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சிறு குழந்தைகளின் கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்படும் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சை என்பவற்றுக்காக ஜனாதிபதி நிதியில் இருந்து நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் எதிர்கால நலனுக்காகவும் வறிய பெற்றோர்களின் நலனுக்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (5-6)

## பழங்கள்- மரக்கறிகள் இறக்குமதிக்கு 13,000 கோடி ஒதுக்கீடு



(கொழும்பு)

கடந்த வருடத்தில் நாட்டிற்கு பழங்கள் மற்றும் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்காக 13,000 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள இறக்குமதி செலவினம் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதற்கமைய, நாட்டிற்கு இறக்குமதி மரக்கறி வகைகளுக்காக 11,658 கோடி ரூபாவும் பழங்களுக்காக 1,308 கோடி ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. அதேநேரம் கடந்த ஆண்டில் எரிபொருள் இறக்குமதிக்காகவே அதிகளவில் செலவிடப்பட்டுள்ளது.

அதற்காக மாத்திரம் 153,924 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இது வருடத்தின் மொத்த இறக்குமதி செலவினத்தில் 28 சதவீதமாகும் என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர, மருந்து பொருட்களின் இறக்குமதிக்காக 21,778 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (5-6)

## வாகன பாகங்களை விற்ற இருவர் கைது

(கொழும்பு)

நிட்டம்புவ பகுதியில் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்று அவற்றை பாகங்களாகப் பிரித்து விற்பனை செய்து வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் வாகனங்கள் உடைக்கப்படுவதாக தமக்கு கிடைத்த தகவலுக்கமைய, கம்பஹா வலய மோசடி விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர்.

அதன்போது, சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மகிழுந்து ஒன்றை பாகங்களாக பிரித்துத் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பல் வேறு பகுதிகளில் இருந்து வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்று பாகங்களாக பிரித்து விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரிய [illegible]

## இன்று ஒரு தகவல் 35



தென்கச்சி கோசுவாமிநாதன்

# படிப்பு

"அறிவுத் தேவையை விட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது" என்று ஒரு அறிஞர் சொல்லியிருக்கிறார்.

அதனாலே ஏட்டுப்படிப்பும் வேண்டும். அனுபவப்படிப்பும் வேண்டும். இது இரண்டும் இருந்தால் தான் வாழ்க்கைச்சக்கரம் வேகமாக ஓடும். இன்றைக்கு படிப்பதற்கு துணையாக இருப்பது புத்தகங்கள். பாடசாலையிலே சரியாக படிக்கவில்லை என்றால் தலையிலே இருப்பது மூளையா இல்லை களிமண்ணா என்று கேட்பது வழக்கம். ஆனால் முதல் புத்தகமே களிமண்ணாக தான் இருந்தது என்பதை நினைத்து ஆறுதல் அடைந்து கொள்ளலாம்.

ஆமாம் புத்தகங்கள் முதலிலே களிமண் சுவடியாகத்தான் ஆரம்பமாகியது.எங்கே மொசப்பத்தேமியாவில.களிமண்ணிலே தான் எழுத்துக்களை பதித்தார்கள். அதுக்கு பின்பு தான் கல்லிலே பதித்தார்கள். கட்டையிலே பதித்தார்கள்.

இப்போது அச்சாகவே பத்திரிகையில் பதிக்க ஆரம்பித்து விட்டோம்.

பத்திரிகையில் பதிவது எல்லாம் மனதில் பதிகிறதா என்பது தான் கேள்வி.அது இருக்கட்டும். களிமண் படிவத்தில் பெரிய காப்பியம் எல்லாம் கூட பதிவு செய்து வைத்திருந்தார்களாம்.

பத்திரிகையில் எழுதும் பழக்கம் எகிப்திலே ஆரம்பமாகியது. Cyprus papyrus என்று ஒரு செடி அதில் இருந்து papyrus செய்து அதில் எழுதினார்கள்.

இது வெளிநாடுகளுக்கு கூட ஏற்றுமதி ஆகியது. ஒரு தடவை எகிப்து மன்னர் இன்னொரு நாட்டு மன்னரிடம் சண்டை போட்டுக்கொண்டு இந்த ஏற்றுமதியை நிறுத்தி விட்டார். உடனே அந்த மனிதர் யோசித்தார். தோலில் எழுத ஆரம்பித்து விட்டார். கால்நடைகளின் தோல் இதுக்கு பயன்பட்டது. இன்றைக்கு நாம் வலது பக்கத்தில் ஆரம்பித்து இடது பக்கமாக படித்து கொண்டு போகிறோம் அல்லவா. 14 ஆவது நூற்றாண்டிலே கிரேக்கர்கள் தான் இதற்கு வழிகாட்டினார்கள்.

15ஆம் நூற்றாண்டிலே ஜேர்மனியர் ஒருவர் தான் அச்சடிக்கும் முறையை கண்டுபிடித்தார். இன்றைக்கு நிறைய புத்தகத்தை அச்சடித்து கொண்டு இருக்கிறோம். அதை படிக்கிறார்களா இல்லையா என்பதை பற்றி கவலைப்படாமலே அச்சடித்து கொண்டு இருப்போம்.

Bacon என்ன சொல்கிறார் தெரியுமா? சில புத்தகத்தை சுவைக்கணுமாம். சில புத்தகத்தை முழுங்கி விடணுமாம். சில புத்தகத்தை ஜீரணமே பண்ணி விடணுமாம். இப்படி சொன்னால் அதை அப்படியே எண்ணிக்கொண்டு ருசி பார்க்க ஆரம்பித்து விடக்கூடாது. அவர் புத்தகம் என்று சொன்னால் அதில் இருக்கும் கருத்தை சுவைக்கணும் என்று அர்த்தம்.

படிப்பது என்பது வேறு. கற்பது என்பது வேறு. பார்க்க வேண்டியது சில இருக்கு. கற்க வேண்டியதும் சில இருக்கு. திருக்குறளை கற்கிறேன் என்று சொல்லணும். திருக்குறளை பார்த்தேன் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் புரட்டிப்பார்த்து தூக்கிப்போட்டேன் என்று ஆகிவிடும்.

பத்திரிகை வாங்குகிறோம். என்ன சொல்லுகிறோம். பேப்பர் பார்த்தேன் அதில் இப்படி போட்டு இருக்கு என்று சொல்கிறோம்.

இன்றைய பத்திரிகை வாங்கி காலையில் இருந்து கற்றுக்கொண்டேன் என்றா சொல்லுவது.

ஒரு நூறு இருநூறு வருடத்திற்கு முன்னாடி கூட யாராவது செத்துப் போனா அவர்கள் இறந்த பின்னும் படிப்பார்கள் என்னும் நம்பிக்கையில் சில புத்தகங்களை சேர்த்து வைத்து புதைக்கும் பழக்கம் சில நாடுகளில் இருந்தது.

நமது ஊரிலேயும் சில பேர் செத்தால் புத்தகம் வைத்து புதைக்கலாம் என்று தோன்றுகிறது. இருந்த வரைக்கும் தான் எதையும் படிக்கவில்லை. இனி மேலாவது படி என்று சொல்லுவது மாதிரி.

இவ்வளவு தகவலும் எதற்காக என்றால் படிப்பு மிகவும் முக்கியம் என்னும் தகவலை சொல்வதற்கு தான். படிக்கிற பிள்ளைகளுக்கு ஒரு வார்த்தை. உங்களுக்கெல்லாம் பரீட்சை நெருங்குகிறது. நன்றாக படியுங்கள். நெட்டுரு போடக்கூடாது. புரிந்து கொண்டு படித்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளணும்.

பரீட்சை வரும் என்றால் சில பேர் அடுத்தவர்களை நம்பி இருப்பதும் உண்டு.அது ரொம்ப தப்பு. ஒருத்தர் அப்படித்தான் அடுத்த வீட்டுக்காரரிடம் சொன்னார். சார்! பரீட்சை வருகிறது. உங்க பையனை நல்லா படிக்க சொல்லுங்க என்றார். என் பையன் பேரில் உங்களுக்கு அதிக அக்கறை. நன்றி சார் என்றார் அவர்.


அதற்கில்லை சார். உங்க பையனுக்கு பக்கத்தில் உட்கார்ந்து தான் எனது பிள்ளை பரீட்சை எழுதப் போகிறான். அதனாலே தான் சொன்னேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தின் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லினை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜோன்குயின்ரஸ் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாட்டி வைத்தார். (படங்கள்:-யதுபாஸ்கரன்)

# காலநடைகளுக்கு போதியளவு மேய்ச்சல் தரவைகள் இல்லை



(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவைகளை இனங்காட்டுமாறு கால்நடை வளர்ப்பாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கை காலங்களில் கால்நடைகளை முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

தற்போது காலபோக நெற்செய்கை இடம்பெற்று அறுவடை செய்யப்படும் நெல் வட்டுவாகல் தொடக்கம் புதுக்குடியிருப்பு, ஒட்டு சுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் வரையான வீதிகளில் நெல் உலரவிடப்படுவதன் காரணமாக வீதிக்கு அருகில் மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள் வீதியில் உலர விடப்படும் நெல்லினை நோக்கி நகர்வதனால் விபத்துகள் ஏற்படுவதுடன் நெல்லினை பாதுகாப்பாக உலர விட முடியாத நிலைமை உள்ளது.

அத்துடன் கால்நடைகளுக்கும் போதியளவு மேய்ச்சல் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான மேய்ச்சல் தரவைகளை இனங்காட்டுமாறு அதிகாரிகளிடம் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-350)

# நஞ்சுண்டான் குளத்தினை புனரமைத்து தாருங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

நஞ்சுண்டான் குளத்தினை புனரமைப்பு செய்யுங்கள். புதுக்குடியிருப்பு வள்ளுவர்புரம் கிராமத்தில் இருந்து 6 கிலோ மீற்றர் தூரத்தில் சேதமடைந்த நிலையில் இக்குளம் காணப்படுகின்றது.

இக்குளத்தினை புனரமைப்பதன் மூலம் வள்ளுவர்புரம், இளங்கோபுரம், மாணிக்கபுரம், தேராவில் ஆகிய கிராமங்களின் மக்கள் பெரும் நன்மையடைவார்கள்.

தற்போது சேதமடைந்து காணப்படுகின்ற குளத்திற்கு வருகை தருகின்ற நீர் விசுவமடு குளத்திற்கோ, உடையார் கட்டு குளத்திற்கோ செல்லாது நேரடியாக கடலினை சென்றடைகிறது.

எனவே நஞ்சுண்டான் குளத்தினை புனரமைப்பதன் மூலம் இப்பகுதியில் பெருமளவு குடும்பங்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.(5-6-350)

### கீரிமலை முத்துமாரி அம்பாள் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

கீரிமலை திருவருள்மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாளின் மகோற்சவம் இன்று காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரெண்டு நாட்கள் உற்சவம் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திரு விழாவும் 24 ஆம் திகதி மாசி மகத் தீர்த்தோற்சவத் திருவிழாவும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை கப்பல் திருவிழாவும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (5-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3040

நதியா




சாதுரா




ஜோன்சன்




வான்மீகி




சத்தியா





மாதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'தஞ்சையில் பழுவேட்டரையர் அரண்மனையில் பார்த்த நந்தினி இங்கே இந்த அநுராதபுரத்து வீதிக்கு எப்படி வந்திருக்க முடியும்? நள்ளிரவில் இங்கே வந்து எதற்காக நிற்கவேண்டும்!' மறுகணம் அந்த உருவம் மாயமாய் மறைந்தது. மற்ற இருவர் மட்டும் நின்றார்கள்.

நம்மில் யாருக்குப் பிராயம் முடியப் போகிறது என்று யாருக்குத் தெரியும்?' என்று பொன்னியின் செல்வர் கூறியது எவ்வளவு உண்மையான வார்த்தை? இப்படி எண்ணி வந்தியத்தேவன் நடுவீதியில் நின்று பார்த்துக் கொண்டிருக்க, இருவரும் அப்பால் சென்றார்கள்.

வந்தியத்தேவன் அவர்களை மறுபடி அணுகிய போது அங்கே நின்ற உருவம் நிலா வெளிச்சத்தில் நன்கு தெரிந்தது. கண்முன்னே காண்பதை நம்புவதா இல்லையா என்ற சந்தேகம் அச்சமயம் அவனுக்கு உண்டாயிற்று.

'இது என்ன பைத்தியக்காரத்தனம்? இது எப்படிச் சாத்தியமாகும்?'

### முப்பத்தாறாம் அத்தியாயம்
### தகுதிக்கு மதிப்பு உண்டா?

இளவரசரும் நந்தினியும் நின்ற இடத்தை நோக்கி வந்தியத்தேவன் விரைவாகவே நடந்தான். அவன் அவ்விடத்தை அடைவதற்குள் கொஞ்சம் சந்தேகம் தோன்றிவிட்டது. இவள் நந்தினி தானா? பழுவூர் ராணிக்குரிய ஆடை ஆபரணங்கள் ஒன்றுமில்லையே! சந்நியாசினியைப் போல் அல்லவா எளிய உடை தரித்திருக்கிறாள்? முகம் நந்தினி முகம் மாதிரி தோன்றுகிறது. ஆனால் ஏதோ ஒரு வித்தியாசமும் இருக்கிறது. அது என்ன?

அவர்கள் நின்ற இடத்துக்கு வந்தியத்தேவன் சென்றதும் அந்த ஸ்திரீ நகர்ந்து வீதி ஓரத்து வீடுகளின் நிழலில் மறைந்தாள். வந்தியத்தேவன் பரபரப்புடன் அவளைத் தொடர்ந்து செல்லப் பார்த்தான். இளவரசர் அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்.

"ஐயா! அந்த ஸ்திரீ யார்? பார்த்த முகமாகத் தோன்றியது!" என்றான்.

இதற்குள் அங்கு வந்து சேர்ந்த ஆழ்வார்க்கடியான், "அந்த ஸ்திரீ சோழநாட்டின் குல தெய்வமாகத்தான் இருக்க வேண்டும். அதோ பாருங்கள்! நாம் அச்சமயம் நகர்ந்திராவிட்டால் இத்தனை நேரம் புத்தர் பெருமானின் சரணங்களை அடைந்திருப்போம்" என்றான்.

திருமலை சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்தார்கள். அங்கே கட்டடத்தின் மேற்பகுதி இடிந்து விழுந்திருந்த இடம் ஒரு சிறிய குன்றைப்போல் இருந்தது. ஒரு சிறிய யானையைக் கூட அந்தக் குன்று வெளியில் வர முடியாதபடி அமுக்கிக் கொன்றிருக்கும். மூன்று சிறிய மனிதர்கள் எம்மாத்திரம்?

"நல்ல சமயத்திலேதான் நம் குலதெய்வம் தோன்றி நம்மைக் கையைத் தட்டி அழைத்தது" என்றார் பொன்னியின் செல்வர்.

"இளவரசே! அந்த ஸ்திரீ யார் என்று சொன்னீர்கள்?" என்று வந்தியத்தேவன் வியப்புடன் கேட்டான்.

"உமக்கு யார் என்று தோன்றியது? அவளைத் தொடர்ந்து போக ஏன் யத்தனித்தீர்கள்?" என்று இளவரசர் கேட்டார்.

"சோழர்களின் குல தெய்வம் என்றல்லவா இந்த வைஷ்ணவர் சொன்னார். சோழர் குலத்துக்குக் கேடாக வந்த தேவதையாக எனக்குத் தோன்றியது."

"அப்படியென்றால்? யார் என்று எண்ணிச் சொல்கிறீர்?"

"என்னுடைய பிரமைதானோ என்னமோ? பழுவேட்டரையர் இளைய தாரமாக மணந்திருக்கும் நந்தினி தேவி என்று தோன்றியது. உங்கள் இருவருக்கும் அப்படிப் படவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"நான் நன்றாய்ப் பார்க்கவில்லை. ஆனாலும் அது உன் சித்தப் பிரமையாகத்தான் இருக்கவேண்டும். பழுவூர் ராணி இங்கு எப்படி வந்திருக்க முடியும்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இவர் சொல்வது முழுவதும் சித்தப் பிரமையன்று. கண்ணின் பிரமையும் அதில் சேர்ந்திருக்கிறது.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

## ஒட்டுக் கேட்ட ஓநாய்



ஒரு கிராமத்துக்கு பக்கத்துல ஒரு அடர்ந்த காடு இருந்துச்சு.

அந்த காட்டுல ஒரு முட்டாள் ஓநாய் இருந்துச்சு. ஒரு நாள் இரை தேடி காட்டுக்குள்ள அலைஞ்ச அந்த ஓநாய்க்கு ஒண்ணுமே கிடைக்கல.

அதனால பக்கத்துல இருக்குற கிராமத்துக்குள்ள போயி ஏதாவது உணவு கிடைக்குமான்னு பார்த்துச்சு.

அப்பத்தான் அந்த காட்டு ஓரத்துல ஒரு சின்ன வீடு இருக்குறதையும் அதோட ஜன்னல்ல ஒரு அம்மா தன்னோட குழந்தைக்கு சாப்பாடு ஊட்டி விட்டுகிட்டு இருக்குறதையும் பார்த்துச்சு.

உடனே மெதுவா மறைஞ்சு மறைஞ்சு அந்த ஜன்னல் பக்கத்துக்கு போச்சு.

அப்ப சாப்பிடாம அடம்பிடிச்ச அந்த குழந்தை கிட்ட அந்த அம்மா சொன்னாங்க. நீ சாப்பி[illegible]லைன்னா உன்ன ஓநாய்க்கு தூக்கி கொடுத்துடுவேன்னு சொன்னாங்க.

இத கேட்ட முட்டாள் ஓநாய் அந்த அம்மா அந்த குழந்தையை தனக்கு கொடுத்துடுவாங்கனு முட்டாள்த்தனமா நம்பிச்சு. அதனால அன்னைக்கு முழுதும் அங்கேயே காத்துகிட்டு கிடந்துச்சு.

சாயந்திரம் ஆனதும் திரும்ப அந்த அம்மா அந்த குழந்தைக்கு ஜன்னல் வழியா வேடிக்கை காமிச்சுக்கிட்டே சாப்பாடு ஊட்டினாங்க.

அப்ப அந்த குழந்தை சொல்லுச்சு. என்னை ஓநாயிகிட்ட கொடுத்துடுவீங்களானு கேட்டுச்சு. அதுக்கு அந்த அம்மா சீ சீ அம்மா சும்மா சொன்னேன் என் செல்லத்தை அப்படி எல்லாம் செய்யமாட்டேன்னு சொன்னாங்க.

அப்ப அந்த குழந்தை கேட்டுச்சு. ஓநாய் இங்க வந்தா என்ன பண்ணுவீங்கனு. அதுக்கு அந்த அம்மா சொன்னாங்க நம்ம அப்பாகிட்ட சொன்னால் அவரு வைச்சிருக்கின்ற பெரிய ஈட்டிய அது மேல எறிஞ்சி கொன்னுடுவாருனு சொன்னாங்க. அப்பன்னு பார்த்து இரும்பு வேலை செய்யிற அவங்க அப்பா ஒரு ஈட்டிய எடுத்துக்கிட்டு அந்த பக்கம் வந்தாரு.

அத பார்த்த ஓநாய் ரொம்ப பயந்து போய் தல தெறிக்க காட்டுக்குள்ள ஓடிடுச்சு.

சின்ன குழந்தைக்காக சொன்ன பொய்யை உண்மைன்னு நம்பி அங்கேயே காத்துக் கிடந்த தன்னோட முட்டாள்த்தனத்தை நினைச்சு ரொம்ப வருத்தப்பட்டுச்சு அந்த ஓநாய்.

**நீதி : நாம் பார்ப்பதை, கேட்பதை எல்லாம் நம்பக் கூடாது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான மனோநிலையை உருவாக்கி, வீணான மற்றும் தீய எண்ணங்கள் எனும் எதிரியை அழிப்போம்!. - ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சர்வமதப் பேரவை மக்களை ஏமாற்றுகிறதா?

எது தொடர்பில் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றனவோ அவை தமக்கான பணியைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த அமைப்பின் பயனை மக்கள் அனுபவிப்பர்.

உதாரணத்துக்கு ஆலய அறங்காவலர் சபை என்றால், அந்தச் சபை அறத்தை - சமய விழுமியத்தை பாதுகாக்க வேண்டும். மாணவர்களிடையே இறைவழிபாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

இதேபோன்று பழைய மாணவர் சங்கமாயின், தாம் சார்ந்த பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் மாணவர்களின் கல்விக்கும் வறிய மாணவர்களுக்கும் வேண்டிய உதவிகளை வழங்க வேண்டும்.

இதைவிடுத்து பழைய மாணவர் சங்கம் என்ற பேரில் பாடசாலை நிர்வாகத்தைக் குழப்புவதிலும் உபத்திரவம் கொடுப்பதிலுமே தீவிரமாக இருந்தால், குறித்த பழைய மாணவர் சங்கம் சம்பந்தப்பட்ட பாடசாலையை போட்டுடைத்து விடும்.

இதேபோன்று இலங்கையில் சர்வமதப் பேரவை என்ற ஓர் அமைப்பு இயங்கி வருகிறது.

இந்த நாட்டிலுள்ள அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைக்கப்பட்ட சர்வமதப் பேரவை அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று கூட்டங்களை நடத்தி வருகிறது.

உண்மையில் சர்வமதப் பேரவை என்பது காத்திரமாக இயங்குமாயின், அதன் உருவாக்கம் இந்த நாட்டில் மத நல்லிணக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.

ஆனால் சர்வமதப் பேரவை உருவாக்கப்பட்ட பின்னர்தான், இலங்கையில் சமய முரண்பாடுகள் வலுப்பெற்றனவோ என்று நினைக்குமளவுக்கு நிலைமை உள்ளது.

ஆம், சர்வமதப் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் இந்த நாட்டில் மத முரண்பாடுகள் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது.

அதாவது இந்த நாட்டின் எந்த மூலையில் மத முரண்பாடுகள் நடந்தாலும் அந்த இடத்தில் சர்வமதப் பேரவை பிரசன்னமாகி, சம்பந்தப்பட்ட முரண்பாட்டைத் தீர்த்து வைத்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறான பணியைச் செய்வதுதான் சர்வமதப் பேரவையின் பணிக்கூற்றாக இருக்கும்.

ஆனால் இந்த நாட்டில் தமிழர் பிரதேசத்தில் அதிலும் குறிப்பாக, காலத்தால் முந்திய சிவாலயங்கள் அமைந்துள்ள இடங்களைக் கபளீகரம் செய்வதில் பௌத்த பீடங்களும் பௌத்தத் துறவிகளும் படைத்தரப்பினரும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் கூட (11) வவுனியா வெடுக்குநாறி மலைக்குச் சென்ற பௌத்த பிக்குகளும் அவர்களோடு சென்ற படையினரும் அங்குள்ள ஆதிசிவலிங்கம் இருக்கும் இடத்தில் பாதணிகளோடு நடமாடியுள்ளனர்.

தவிர, இந்த இடம் பௌத்தர்களுக்குச் சொந்தமானதென்றும் அவர்கள் கொக்கரித்துள்ளனர்.

இங்குதான் சர்வமதப் பேரவை தலையிட்டு சிவாலயம் அமையப்பெற்ற இடம் சைவ மக்களின் வழிபாட்டுத் தலம் என்பதை உறுதி செய்து நிலைமையைச் சுமுகப்படுத்த வேண்டும்.

இதைச் செய்வதற்கு திராணி இல்லையென்றால், சர்வமதப் பேரவை என்ற பெயரால் மக்களை ஏமாற்றுகின்ற வேலையைத்தான் அந்த அமைப்பு செய்கிறது என அறுதியிடலாம்.

### ஐ.தே.க விடம் சிறந்த திட்டங்கள் இருக்கின்றன

# ரணிலின் ஆட்சியில் மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கும்

## ருவான் விஜேவர்தன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிடம் சிறந்த திட்டங்கள் இருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த ஐந்தாண்டு ஆட்சியின் கீழ் மக்களுக்குக் கிடைக்கும் நிவாரணங்களை காண முடியும் எனவும் அந்த கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவுக்கு விரிவான நோக்கும் திறமையும் இருக்கின்றது. இதனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவரை மீண்டும் அந்த பதவிக்கு தெரிவு செய்ய நாம் இணைந்து பணியாற்ற வேண்டும்.

2024 ஆம் ஆண்டை தேர்தல் ஆண்டாக குறிப்பிடலாம். ஒக்டோபர் மாதம் நடக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால், நாம் அதற்கு தயாராக வேண்டியது அவசியம்.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான வருடமாக நாங்கள் இந்த வருடத்தை கருதுகிறோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாடு எந்த இடத்தில் இருந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். நாம் வரிசைகளில் நின்றுக் கொண்டிருந்தோம். வரிசைகளில் சிலர் இறந்தும் போயினர்.

அரச கருவூலத்தில் பணம் இருக்கவில்லை. வங்குரோத்து அடைந்த நாட்டை பொறுபேற்கும் தலைவர் ஒருவரை தேடிக் கொண்டிருக்கும் போது, தற்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சத்தமிடும் நபர்கள் தப்பியோடினர். எமது தலைவரான ரணில் விக்கிரமசிங்க மட்டுமே நாட்டை பொறுப்பேற்று கட்டியெழுப்ப முன்வந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை எரித்து அவரை பயமுறுத்த முயற்சித்தனர்.

எனினும் அவர் நாட்டுக்காக மக்களை பற்றி சிந்தித்து தனக்கு எதிராக வேலை செய்த ஆளும் கட்சியினருடன் இணைந்து நாட்டை பொறுப்பேற்றார்.

அவர் நாட்டை பொறுப்பேற்றதன் காரணமாக நாடு வங்குரோத்து நிலைமையில் இருந்து மீண்டு, மக்களுக்கு தற்போது ஓரளவுக்கான நிவாரணங்கள் கிடைத்துள்ளன.

ரணில் விக்கிரசிங்க என்பவர் தைரியமான தலைவர், முடிவுகளை எடுக்க அச்சப்பட மாட்டார். அச்சமின்றி எந்த சவாலையும் எதிர்கொள்வார். இப்படியான தலைவரே எமக்கு தேவை. நாடு தற்போது ஓரளவுக்கு சிறந்த நிலைமைக்கு வந்துள்ளது. இந்த நிலையில், நாங்கள் சரியாக செய்து காட்டுகிறோம் என எதிர்க்கட்சியினர் கூச்சலிடுகின்றனர். சவால்களை எதிர்கொள்ள முடியாது தப்பியோடியவர்கள் இப்படி கூச்சலிடுகின்றனர் எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சப்ரகமுவ பல்கலையின் 7 மாணவர்கள் கைது

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் மூன்று மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்த பல்கலைக்கழகத்தின் 7 மாணவர்கள் சமனல வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்றுவரும் மூன்று மாணவர்கள் கடந்த 9 ஆம் திகதி இரவு, பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலையடுத்து, தலைமறைவாகியிருந்ததாக கூறப்படும் குறித்த ஏழு மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான இரண்டு மாணவர்களும் மாணவி ஒருவரும் தொடர்ந்தும் பலாங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சமனல வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## திருமலையில் ரயில் விபத்து 14வயது மாணவன் மரணம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் 14 வயது பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கெலிஓயாவில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோதியதில் குறித்த மாணவன் உயிரிழந்துள்ளான்.

தம்பலகமுவ மொல்லிப்பொத்தானை புகையிரத நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மொல்லிப்பொத்தானை பிரதேசத்தில் வசித்து வந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தம்பலகமுவ பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இருவேறு இடங்களில் இரு சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

நாட்டின் இருவேறு இடங்களில் இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறை - பெரியநீலாவணை, பாண்டிருப்பு கடற்கரையில் அடையாளந்தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெரியநீலாவணை - பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் நேற்று காலை ஆணொருவரின் சடலம் கரையொதுங்கி மீண்டும் கடலுக்கு அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீனவர்களால் கரைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 50 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கல்முனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகசேனை - அக்கரகந்த ஆற்றில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற லிந்துலை பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் அக்கரகந்த தோட்டத்தை 3 பிள்ளைகளின்தாய் ஆவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ம-7)

### விமானத்தில் திடீர் புகை

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அவசரமாக தரையிறக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான யுஎஸ் 605 என்ற விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இருந்து கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை நோக்கிய பயணத்தை தொடங்கிய குறித்த விமானம், பயணம் தொடங்கிய 20 ஆவது நிமிடத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தினுள் ஏற்பட்ட திடீர் புகை காரணமாக அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

குறித்த விமானத்தில் 100 இற்கும் அதிகமான பயணிகள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

விமானியின் நடவடிக்கை காரணமாக பயணிகளுக்கு உயிர்ச் சேதம் இன்றி விமானம் தரையிறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## முதலிரு மேற்கத்தைய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

21

மேலும் சீதன உறுதி எழுதப்படும் போதும் நன்கொடை உறுதி எழுதப்படும் போதும் அசையா ஆதனத்தைக் கொடுப்பவர் தங்களுக்கு சீவிய உரித்தை வைத்துக் கொண்டு அதனை உறுதியில் தெளிவாகக் காட்டி எழுத முடியும்.

### தேடியதேட்டம்

திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனால் அல்லது மனைவியால் அல்லது இருவரும் சேர்ந்து விலை கொடுத்து வாங்கும் ஆதனம் தேடிய தேட்டம் என அழைக்கப்படும். தேடிய தேட்டத்தில் அரைவாசிப் பங்கு கணவனுக்கும் மிகுதி அரைவாசி மனைவிக்கும் சொந்தமாகும். கணவன் தன் தேடிய தேட்டப் பங்கை தன் விருப்பப்படி கைமாற்ற முடியும். ஆனால் மனைவி தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் என்பதால் கணவனுடன் சேர்ந்தே தன் தேடிய தேட்டப் பங்கை கைமாற்ற முடியும். தேடிய தேட்டமுடைய குடும்பத்தில் கணவன் அல்லது மனைவி ஒருவர் இறந்தால் இறந்தவருக்குரிய பங்கில் அரைப் பங்கு அதாவது முழு ஆதனத்தின் கால் பங்கு வாழ்க்கைத் துணைக்கும் மீதி அதாவது முழு ஆதனத்தின் கால்பங்கு இறந்தவரின் பிள்ளைகளுக்கு சமபங்காக சென்றடையும். பிள்ளைகள் இல்லாவிடின் இறந்தவரின் பெற்றோர், சகோதரங்களுக்கு உரிமை வழியாக சென்றடையும்.

எனவே உயிருடனிருக்கும் வாழ்க்கைத் துணைக்கு முக்கால் (3/4) பங்கு சொந்தமாகிவிடும். பிள்ளைகளுக்கு கால் (1/4) பங்கு சொந்தமாகும். தேடிய தேட்டம் பிள்ளைகளை சென்றடையும் போது அது முதுசொம் என்ற பெயரைப் பெறும். சீதனம் வாங்கித் திருமணம் செய்த பெண் பிள்ளைகளுக்கு இந்த பங்கைப் பெற தகுதியில்லை.

### உரிமை ஆதனம் அல்லது மலட்டுச் சொத்து

பெற்றோர் அல்லது மூதாதையர் தவிர்ந்த உறவினர் ஒருவர் இறக்கும் போது வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனம் உரிமை (அடி நிலை) ஆதனம் அல்லது மலட்டுச் சொத்து எனப்படும். உரிமை வழியாக ஒரு ஆதனத்தைப் பெறுபவருக்கு அது அவரது தனிப்பட்ட ஆதனமாக அமையும் என்பதோடு அவர் அதனை தன் விருப்பப்படி கைமாற்றம் செய்ய முடியும். இது பெரும்பாலும் சொரியல் பங்காகவே இருக்கும்.

1947 இல 58இல் யாழ்ப்பாண விவாக உரிமைகள் மற்றும் உரிமைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தேசவழமை சட்டத்துக்குட்பட்டவர்கள் யாதொரு பிரதேசத்தில் இருப்பினும் அவர்களின் சொத்து இச்சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும். இச்சட்டத்தின் படி காணி விற்பனையின் போது அந்த காணிக் கண்மையிலுள்ள நபருக்கு முதலில் அழைப்பு விடுக்கும் அவசியம் கூறப்பட்டிருக்கின்றது. இச்சட்டம் ஆள்சார் சட்டமாகவும் இடம்சார் சட்டமாகவும் தொழிற்படுகின்றது.

சுதேச சட்டங்களில் இவ்விரு வகையான ஆளுகைகளையும் உடைய சட்டம் தேசவழமை மட்டுமே. நபர்சார் சட்டம் எனில் யாழ்பாணத் தமிழர்கள் இலங்கையில் எங்கு வசித்தாலும் (வட மாகாணத்திற்கு உள்ளேயும் வெளியேயும்) அவர்கள் தேசவழமையால் ஆளப்படுவார்கள். இடம்சார் சட்டம் என்பது வடமாகாண நிலங்கள் யாவும் இச்சட்டம் மூலம் ஆளப்படும். அந்நிலங்கள் யாருக்கும் சொந்தமாக காணப்படலாம். உதாரணமாக சிங்களவர், முஸ்லிம் நபர்கள் யாராவது காணியை வடமாகாணத்தில் கொண்டிருந்தாலும் அவர்கள் அக்காணி தொடர்பில் தேசவழமையினால் ஆளப்படுவார்கள். இது இடம்சார் ஆளுகை எனப்படும்.

பேரினவாதிகள் கூறிவருகின்றதைப் போன்று எந்தவொரு இலங்கைப் பிரஜையும் தனி உடைமையாகவுள்ள எந்தச் சொத்தையும் வாங்குவதை தேசவழமை தடைசெய்யவில்லை. அத்துடன் இச்சட்டம் தமிழர்களுக்கு எந்த விதமான பிரத்தியேகமான சலுகையையும் வழங்கவில்லை. ஒன்றுக்கும் அதிகமானவர்களின் கூட்டு உடைமையான காணியையோ, சொத்தையோ வெளியார் வாங்குவதைக் தடுப்பதே தேசவழமையின் நோக்கமாகும். கூட்டு உடைமையாகவுள்ள சொத்தின் ஒரு பகுதியை வெளியார் வாங்க அனுமதிக்கப்படும் போது தகராறுகளுக்கு இடமேற்படுகிறது என்பதே இதன் பின்னணியில் உள்ள வாதமாகும்.

### ஒல்லாந்தர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகள்

கி.பி 1658 இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலிருந்து போர்த்துக்கேயர்களை விரட்டியடித்த ஒல்லாந்தர்கள் அப்பிரதேசங்களை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். முதலாவதாக 1638இல் மட்டக்களப்பும் 1640 இல் காலியும் 1656 இல் கொழும்பும் 1658 இல் யாழ்ப்பாணமும் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் வந்தன. 1638இல் மட்டக்களப்பில் இருந்த போர்த்துக்கேயர்களின் கோட்டையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் இரண்டாவது இராஜசிங்க (1635 - 1687) மன்னருடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டனர். அதன் 14ஆவது வாசகத்தில் நாணயப் பயன்பாடு தொடர்பான பல ஒழுங்கு விதிகள் சேர்க்கப்பட்டிருந்தன. இதற்கமைய மன்னரால் அல்லது ஒல்லாந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்படாத எவராலும் நாணயங்களை அச்சிடல், தயாரித்தல், விளம்பரம் செய்தல் அல்லது நாணயங்களுக்கு நிகராக தரக்குறைவான நாணயங்களை தயாரித்தல் அல்லது சுற்றோட்டத்திற்கு விடுத்தல் சட்டத்திற்கு மாறானதாகும் என்று இருந்தது.

### தொய்த்துக்கள்

அக்காலத்தில் கொடுக்கல் - வாங்கல்களின் போது அதிகமாக “தொய்த்து”நாணயங்களே பயன்படுத்தப்பட்டன. இவை மிகச் சிறிய செப்பு நாணய வகையாகும். ஆதலால் கொடுக்கல்-வாங்கல்களின் போது பெருந்தொகையான மேற்படி சிறிய செப்பு நாணயங்களை கணிப்பிடுதல் இலகுவாயிருக்கவில்லை. இந்த வசதியீனத்திலிருந்து மீள்வதற்கு 1737 ஆம் ஆண்டளவில் அப்போது பயன்படுத்தப்பட்ட “தொய்த்து” நாணயங்களை ௹ 16, 24 வீதம் கோர்வை செய்து நாணயக் கோர்வைகளாக “துட்டு” 2, 4, 6 பெறுமதியைக் கொண்டதாக கொடுக்கல் - வாங்கல்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ஆயினும், 18 ஆவது நூற்றாண்டில் ஒல்லாந்தர் அவர்களது “துட்டு” நாணயங்களை இலங்கையில் அச்சிட ஆரம்பித்தனர். ஒல்லாந்தர்கள் இலங்கையில் நாணயங்கள் அச்சிட்ட முதலாவது வார்ப் படத் தொழிற்சாலை 1781 இல் கொழும்பு கெய்மன் வாயிலுக்குப் பக்கத்திலேயே நிறுவப்பட்டிருந்தது.

இந்த நாணயங்களுக்கு மேலதிகமாக “ரிக்ஸ் டொலரும்” இக்காலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட ஒல்லாந்த நாணய வகையொன்றாகும். அது சிங்களத்தில் “பதாக” என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இது வெள்ளி நாணய வகை யொன்றாகும்.

ஒரு ரூபா வெள்ளி நாணயமும் ஒல்லாந்தர்களால் எமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1781 இலும் 1786 இலும் வார்க்கப்பட்டுள்ளது. நாணயத்தின் முகப்பில் கொழும்பு ஒல்லாந்த கம்பனியின் நாணயம் என்பதும் பின்பக்கத்தில் இலங்கைத் தீவின் நாணயம் என்பதும் அரேபிய மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாணயத்தின் மறு பக்கத்தில் வெளியிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் காலத்து நாணயங்களில் சில பின்வரும் பெறுமதிகளில் இருந்ததாக இலங்கை மத்திய வங்கியின் இணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அவற்றின் படங்களும் காட்டப்பட்டுள்ளன. அவை சிதொய்த்து, அரைகொலண்டின தொய்த்து, அரைஉற்றிச்தொய்த்து, கொலண்டினதொய்த்து,கால்சிதொய்த்து,ரீதொய்த்து,உற்றிச்தொய்த்து,மேற்குபிரீஸ்லாந்துதொய்த்து,ஷீலாண்ஷயாதொய்த்து, துமாதுாண், பதவியன்மின்டக்,சிலோன்ஸ்ருய்வர்ஸ் - 1, சிலோன்ஸ்ருய்வர்ஸ் - 2,சிலோன்ஸ்ருய்வர்ஸ்-3 என்பனவாகும்.

### முதலாவது வங்கி நாணயத்தாள்கள்

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதி வரை கொடுக்கல் - வாங்கலின் பொருட்டு நாணயக் குத்திகளே பயன்படுத்தப்பட்டன. ஆயினும் 1700களின் இறுதிப் பகுதியின் போது ஒல்லாந்தரின் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்தன. திறைசேரியை முழுமையாகவே வெற்றாக்கிவிட்டு, செலவு வருமானத்தைத் தாண்டிச் சென்றது. அத்தகையதொரு பின்னணியிலேயே நாணயத்தாள்களுக்கான அடிப்படை இடப்பட்டது.

இதற்கிணங்க, 1785 மார்ச் 19 ஆம் திகதி 25000 பதாக பெறுமதியுடைய நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கிணங்க இலங்கையின் முதலாவது நாணயத்தாள் தொகுதி 1785 மே மாதம் 10 ஆம் திகதி தோன்றியது. அந்த முதலாவது நாணயத்தாள் தொகுதி பதாக 50, 100, 500, மற்றும் 1000 பெறுமதிகளைக் கொண்டிருந்தது. ஆயினும் பின்னர் பதாக 1, 2, 3, 4, 5, 10 நாணயத்தாள்களும் அச்சிடப்பட்டுள்ளன. இந்த நாணயத்தாள்கள் மூன்று அரசாங்க அலுவலர்களின் கையொப்பத்துடன் கூடியதாக காணப்பட்டன.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, எருக்கலம்பிட்டி 1ஆம் வட்டார பகுதியில் உள்ள 13 வயதுடைய சிறுமி ஒருவர் காணாமல்போன நிலையில் சிறுமியின் பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த சிறுமி வவுனியாவில் உள்ள சிறுவர் நிலையம் ஒன்றுக்கு சென்ற நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து மீட்கப்பட்டு மன்னார் எருக்கலம்பிட்டி 1ஆம் வட்டார பகுதியில் உள்ள வீட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த சிறுமி தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,285)

## கொக்காவிலில்...

வில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

துணுக்காயிலிருந்து காரைநகர் நோக்கிப் பயணித்த அரச பேருந்து எதிரே பயணித்த இராணுவ ரக் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான இராணுவ வாகனம் குடைசாய்ந்ததில் 4 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதுடன், பேருந்தில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பேருந்தை செலுத்திய சாரதியும் காயங்களுடன் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் குறித்த சாரதி பொலிஸாரால் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100)

## மின் கட்டணத்...

சலுகைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், மின்சாரக் கட்டண திருத்தத்தின் மூலம் மக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## சிஐடி விசாரணை...

கப்பட்ட குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, இந்த விபத்து இடம்பெற்றபோது, அந்த வாகனத்திற்கு முன்னால் பயணித்த கொள்கலன் வாகனத்தின் சாரதி நாரஹேன்பிட்டியிலுள்ள குறித்த விசாரணைப் பிரிவுக்குச் சென்று 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரிக்கு மரணத்தை ஏற்படுத்திய விபத்து குறித்து சந்தேகம் உள்ளதாகவும் அது தொடர்பான முறையான விசாரணை நடத்த வேண்டுமெனவும் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி சாமரி பிரியங்கா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வலிகாமம்...

ஏற்கெனவே கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவசர சந்திப்புக்கு மாவட்ட அரச அதிபருக்கு எழுத்து மூலம் கடிதம் வழங்கியபோதும் அவர் வாய்மூடி மௌனியாக இருக்கின்றார் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று மீண்டும் குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையில் 500 ஏக்கரை சுவீகரிக்கும் வகையில் இரகசியமாக நிலங்களை அளவிடும் முயற்சி இடம்பெறுகின்றது என அறிந்து அப்பகுதியில் குவிந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு தமது நிலங்களை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டத்தையடுத்து நில அளவையைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். (ம-7,33)

## கைபேசி...

தொலைபேசி நிறுவனங்களில், உங்கள் பெயரில் உள்ள சிம் அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்பதைச் சரிபார்க்க தொலைபேசி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

உங்கள் தேசிய அடையாள அட்டை எண்ணின் கீழ் உங்களுக்குத் தெரியாமல் சிம் அட்டைகள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றின் இணைப்பை உடனடியாகத் துண்டிப்பது மிகவும் முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## எச்சரிக்கை...

களை பகிர்வதை தவிர்க்கவும், உங்கள் பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் இதனை அறிவிக்கவும்,

உங்கள் பதிவுகள், காணொளிகள் தொடர்பில் அரசாங்கம் அவதானத்துடன் இருக்கின்றது என்பதை மனதில் கொண்டு தேவையற்ற பதிவுகளை தவிர்க்கவும்,

புதிய நிகழ்நிலை சட்டத்தின் மூலம் பொலிஸார் உங்களை கைது செய்யலாம் என்பதை மனதில் கொள்ளவும். (ம-7)

## விபரீ...

ழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதியைச் சேர்ந்த நிதர்சினி (வயது-18) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் பெற்றோர்கள் உறவினர்கள் இல்லாத நிலையில் குறித்த மாணவி தனது அறைக்குள் தூக்கில் தொங்கி தற்கொலைக்கு முயன்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பத்தினை தொடர்ந்து பிரதேசவாசிகள் அயலவர்கள் இணைந்து குறித்த மாணவியினை மீட்டு புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அங்கு அவர் உயிரிழந்துள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவரது சடலம் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பொருளா...

பில் போதிய அறிவு இல்லாத குழுக்கள் மக்கள் முன்னிலை

# நிகழ்நிலை காப்பு சட்டத்தில் 47 திருத்தங்கள்

(கொழும்பு)

நிகழ்நிலை காப்பு சட்டத்தில் பல சரத்துகள் திருத்தப்பட உள்ளன.

அதன்படி, இது தொடர்பான 47 திருத்தங்கள் நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகளை கருத்திற் கொண்டு இந்த சரத்துகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, திருத்தப்பட்ட சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர், எதிர்வரும் பாராளுமன்ற நாட்களில் முதல் வாசிப்பு சமர்ப்பிக்கப்பட உள்ளது. (ம-7)

யில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 0214
E 7 5 0 0 0 2 E

தன நிதானய
திகதி - 2024.02.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1418
S 01 46 47 57 S
Double Chance 26061

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3630
சீட்டிழுப்பு திகதி 12.02.2024
T 11 45 52 66
T 05233

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.12
சீட்டிழுப்பு இலக்கம் 0697
தனுசு 03 06 28 59 தனுசு
08280 13

மஹஜன சம்பத
திகதி 2024/02/12
சீட்டிழுப்பு இலக்கம் 5388
F 7 4 0 3 6 0

மெகா பவர்
திகதி 12/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1736
T 15 03 11 57 63
97594

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா சம்பத
திகதி 12.02.2024 வெற்றி வாரம் 096 வர்ணம் ஊதா
Z 8 9 4 2 7 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,870,196.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2362 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.02.12 தினம் திங்கட்கிழமை
08 28 44 48 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 72,195,727.20

சனிதா
திகதி 2024.02.12 வெற்றி வாரம் 4523 வர்ணம் இளம் நீலம்
13 15 18 70 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,029,604.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4074 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.12 தினம் திங்கட்கிழமை
03 23 43 54 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,010,082.80

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 27 25 47 65 67
1538
12.02.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 505,366,366.20

ஜயோதா Jayoda
திகதி 2024.02.12 வெற்றி வாரம் 1999 வர்ணம் செம்மஞ்சள்
19 54 55 59 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,918,780.40

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2188
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2024.02.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,641,196.80
11 41 53 62 W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியை

## வாழ்த்துகிறோம்

கிளிநொச்சி மாவட்டத்தின் அரசாங்க அதிபராக இருந்து
ஓய்வுபெற்றுச் செல்லும்

## திருமதி. றூபவதி கேதீஸ்வரன்

அவர்களை கிளிநொச்சி மாவட்ட மக்கள்
மனதார வாழ்த்துகின்றோம்



என்றென்றும் இளமையும்
குன்றாத வளமையும்
கொண்டுவளர் கிளிநொச்சி அதிபரே
றூபவதி அம்மையே
செந்தமிழர் துயரோடு
வெந்தழிந்த காலத்தில்
இங்கு வந்து கடமையேற்றாய்
பெண்ணெனப் பிறந்தவொரு
பெருமையும் கொண்டு
அஞ்சாத நெஞ்சத்தில் அனலேற்றி நின்று
அயராது பணி செய்து
அசரவைத்தாய் அம்மா
மெலிந்த உன் உருவமும்
கனிந்த உன் பேச்சும்
இடிவிழினும் அஞ்சாத இரும்பு மனமும்
வாடிய முகம் கண்டால் வாடும் உள்ளமும்
ஊழி உள்ளவரை உழைக்கும் வல்லமையும்
கிளி நகரின் பெருமை மிகு அன்னையே
றூபவதி அம்மையே நீ கொண்டமாண்பாகும்
உன் வழி தொடர பெண்ணினமே
வரம் பெற்றதம்மா
மணிவிழா நாயகியே
மாண்புறு மங்கையே
மலையே வந்தாலும்
தலையில் சுமந்தவளே
திருநாவுக்கரசரும் சீர்
ஏகேந்திரவதியும் ஏந்தி
மகிழ்ந்த எழிலார்ந்த
செல்வமே
கற்றநின் கல்விச்சாலைகள்
உன்னால் பேறுபெற்றுயர
நீ நடந்த தடமெங்கும்
நிழல் மரங்கள் பூக்க
நித்தமுன் சேவை முத்தென ஒளிர

வானமும் வையமும்
வாழ்த்தி பெருமை கொள்ள
வாழ்க நீ றூபவதி வளம் பெருக என்றும்
நேரிய பார்வையும்
நிமிர்ந்த நடையும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் என
பாரதி கணித்த பாவையே
றூபவதி அம்மையே நின்
சேவையோ பெரிது நம்
பார்வையோ சிறிது
காலம் போற்ற கடமைகள் தவறாது
கல்வியும் பொருளும், கலைகளும் வளர
எண்ணிலடங்காத சேவைகளை வழங்கி.
தனியொரு பெண்ணாக
தரணியில் வாழ்கிறாய்
நீ வாழ்கிறாய் என்றால்
கிளிநொச்சி வாழ்கிறது
யாரும் பேசாப் பொருளை
பேசும் பேறு பெற்றோம்.
பெண்ணாகி வந்த பேரருளை
பேசுகிறோம்.
நூறாண்டு சென்றாலும்.
உன் புகழை வேரோட
வைத்து விட்டாய்
கார் காலம் பெய்த மழை
வேர் காத்து விளைய வைக்கும்
பார் முழுதும் பசியை
யார் உணர்வார் அதுபோல்
றூபவதி அன்னை பாய்ச்சிய
நீர் வழியே கிளிநகரும்
செழித்து பல்லாண்டு வாழும்
அம்மா – நின் பணி சிறக்க
மென்மேலும் புகழும் வளமும் பெற்று
வாழ்க வாழ்க வளமுடன் வாழ்க.

(C-8337)

*வாழ்த்துவோர்:-*

**கிளிநொச்சி மாவட்ட சமூகமும்**
**மாவட்ட செயலகமும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.